
இந்தியாவில் பருவநிலை மாற்றம்: நாம் அறிவது என்ன? எவ்வாறு அறிந்தோம்?

பருவநிலை மற்றும் ஆரோக்கியம் ஒரு சிக்கலான ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட அமைப்பை உருவாக்குகின்றன

தொழில்மயமாதலுக்கு முந்தைய (1850-1900) அளவுகளை ஒப்பிடும்போது, 2100ல் இந்தியாவின் சராசரி வெப்பநிலைகள் 2 முதல் 4 டிகிரிகள் வரை உயரும். நிறைய அதிகன மழைப்பொழிவுகள், பெரும் பஞ்சங்கள், வலுமிக்க வெப்ப மண்டல புயல்கள், மற்றும் இமாலயத்தில் குறைந்த பனிப்பொழிவு போன்றவை நிகழ்வதை எதிர்பார்க்கலாம். இது மனித உடல்நலத்தையும் வாழ்க்கை நலத்தையும் பாதிக்கும்.

அதிகரிக்கும் வெப்பம் மனித உடலை பாதிக்கும்: குறைந்த ஆக்கத்திறன், இரத்த ஓட்ட மண்டலத்திலும் இதயத்திலும் அதிகரிக்கும் அழுத்தம், குறையும் சிந்திக்கும் திறன், நீண்டகால சிறுநீரக பிரச்சனைகள் மற்றும் விபத்துகள் அதிகரிக்கும் அபாயம் ஆகியவை இவற்றின் பின்விளைவுகள்.




போபாலில் அதிகரித்து வரும் டெங்கு பரவல்

தற்போதுள்ள தரவுகளை வைத்து பார்த்தால், பருவநிலை தொடர்ந்து மாறுவதால் கொசுக்களால் ஏற்படும் நோய்கள் அதிகரித்து புதிய இடங்களுக்குப் பரவும். போபாலில், 2012ல் லட்சத்தில் 6 நபர்களை பாதித்த டெங்கு நோய் 2019ல் லட்சத்தில் 90 நபர்களை பாதித்துள்ளது. அதிகரிக்கும் வெப்பநிலை, மழைப்பொழிவு மற்றும் ஈரப்பதத்தினால் டெங்கு பரவல் அதிகரிக்கிறது என்பதையும் இந்த ஆய்வு காண்பிக்கிறது. அங்கொன்றும் இங்கொன்றுமாக தாவரங்கள் உள்ள கட்டடப்பகுதிகளிலும் டெங்கு பரவல் அதிகமாக உள்ளது.

பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் மனித இடப்பெயர்வு, நகரங்களை பெரிதாக்கி மக்கள் நெரிசலை அதிகரிக்கும். இதனால், நோய்கள் பரவுவது எளிதாகும். இயற்கை பேரிடர்களுக்கு இட்டுச்செல்லும் அதிபயங்கர பருவநிலை நிகழ்வுகள், உணவு மற்றும் நீர் ஆதார பாதுகாப்பின்மையை அதிகரிக்கும். மேலும், குறிப்பாக இந்தியா போன்ற வளரும் நாடுகளுக்கு சத்துணவு கிடைப்பதில் நீண்டகால இடையூறுகள் ஏற்படலாம்.

பருவநிலை மாற்றம் உடல்நலத்தில் ஏற்படுத்தும் தாக்கத்தை விரைவில் புரிந்துகொள்ளவேண்டியுள்ளது. வருங்காலத்தில் குறிப்பிடத்தக்க சவால்களை பருவநிலை மாற்றத்தினால் இந்தியா சந்திக்க நேரிடும். இவற்றை எதிர்கொள்ள நாம் தயாராக இருக்கவேண்டும்.



அதிகரித்த டெங்கு பரவலுக்கும் அதிகமான மழைப்பொழிவிற்கும் வெப்பநிலைக்கும் தொடர்புள்ளது

கருத்தாக்கம்
Gautam Menon,
Ashoka University

REFERENCES

An assessment of remotely sensed environmental variables on Dengue epidemiology in Central India, 2022. Devojit Kumar Sarma and others. Neglected Tropical Diseases.

வடிவமைப்பு: Radha Sunder

Science at the Sabha 2024

CC BY NC